பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை 08.08.2021 கதிர் 142

## கஞ்சாவுடன் 8 பேர் கைது!

நுவரெலியா மாவட்டம், திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த கஞ்சாவுடன், 8 சந்தேகநபர்களைக் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

☞2

## மேலும் 118 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 118 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 53 ஆயிரத்து 571 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தடுப்பூசி பெயர்களை மறந்துவிட்டு தடுப்பூசிகளை உடன் போடுங்கள்!

## மக்களுக்கு மனோ எம்.பி. அவசர வேண்டுகோள்



"கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைப் போட்டு குழப்பிக்கொள்ள வேண்டாம். இவை பற்றிய கருத்துகள், வழமையான மருந்து வர்த்தக உலகப் போட்டா போட்டி விவகாரம். உள்நாட்டில் வாழ்வதற்கும், வெளிநாடு செல்வதற்கும் முதலில் உயிர் வாழ வேண்டும். ஆகவே, தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களை மறந்து விட்டு, தடுப்பூசியை தாமதிக்காமல் போட்டுக்கொள்ளுங்கள். குறிப்பாக கொழும்பு மக்கள் இனியும் தாமதம் செய்ய வேண்டாம். இங்கே அனர்த்தம் வெளியே சொல்லப்படுவதை விட அதிகம் என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைத் தெரிவு செய்து பெற்றுக்கொள்வது காரணமாக தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாமல்

☞2

# அரசின் முட்டாள்தனமான முடிவுகளாலேயே இலங்கையில் 'டெல்டா' கோரத்தாண்டவம்!

## போட்டுத் தாக்குகின்றார் சம்பிக்க

**ராஜபக்ஷ அரசின் முட்டாள்தனமான முடிவுகளாலேயே இலங்கையில் 'டெல்டா' கொரோனா வைரஸ் கோரத்தாண்டவமாடுகின்றது. இதற்கு அரசே முழுப் பொறுப்புக் கூற வேண்டும்.**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

☞2



## தொற்றாளர் தொகை மேலும் அதிகரித்தால் சிகிச்சையளிக்கும் பணியில் முப்படையினர்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு




இலங்கையில் எதிர்வரும் நாள்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமாயின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்காக முப்படையினர், சுகாதாரப் பிரிவில் ஓய்வுபெற்றுச் சென்ற அதிகாரிகள் மற்றும் தனியார் பிரிவில் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு போதிய

☞2

### செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில்

## கச்சான் வியாபாரிகள் இருவருக்குத் தொற்று

**(இ.கலையமுதன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பொருந்திருவிழா இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில், ஆலயச் சூழலில் கடை உரிமையாளர்கள் 36 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கச்சான் வியாபாரிகள் இரண்டு பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதையடுத்து தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன்

☞2

## இலங்கைக்கு இன்று வந்தன மேலும் 40 லட்சம் சினோபோர்ம்

கொழும்பு, ஒக. 08

சீனாவிலிருந்து மேலும் 40 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் இன்று இலங்கையை வந்தடைந்தன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் 1869, யூ.எல் 865 மற்றும் யூ.எல் 869 ஆகிய மூன்று விசேட விமானங்கள்

☞2

## கீரிமலை சென்றவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள்

**(இ.கலையமுதன்)**



ஆடி அமாவாசை தினமான இன்று யாழ். கீரிமலைப் பகுதியில் பிதிர்க்கடன் செலுத்த அதிகளவான மக்கள் கூடிய நிலையில் அன்டிஜன் பரிசோதனை

☞2

## வவுனியா வயல் பகுதியில் மனித மண்டையோடு மீட்பு!

**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாவட்டம், தாண்டிக்குளம் வயல் பகுதியில் இருந்து மனித மண்டையோடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வயல் வெளியில் நின்றவர்களால் இன்று பிற்பகல் மண்டையோடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

☞2

# இரண்டு சுவாமிகளுக்கும் 30 மாணவர்களுக்கும் கொரோனா!

## இழுத்து மூடப்பட்டது இராமகிருஷ்ணமிஷனின் மட்டக்களப்பு ஆச்சிரமம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

இராமகிருஷ்ணமிஷனின் கிழக்கு மாகாணத்துக்கான மட்டக்களப்பு - கல்லடி ஆச்சிரமம் கொரோனா வைரஸ் காரணமாகத் தனிமைப் படுத்தலுக்காக மூடப்பட்டுள்ளது.

இ.கி.மிஷன் மட்டக்களப்புக்கிளை கல்லடி உப்போடை இராமகிருஷ்ணபுரத்தில் பாரிய வளாகத்தில் இயங்கி வருகின்றது. அதன் பரிபாலனத்தின்கீழுள்ள இராமகிருஷ்ணமிசன் சிறுவர் இல்லம், சாரதா சிறுமியர் இல்லம் ஆகியவற்றில் சுமார் 140 சிறுவர், சிறுமியர்கள் ஆத்மீக சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

அங்குள்ள இரு சுவாமிகள் மற்றும் 30 மாணவர்களுக்குக்

☞2



## தடுப்பூசி பெயர்களை மறந்துவிட்டு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பலர் இருப்பது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யவில்லை. நானும் அப்படிதான் தடுப்பூசி போட்டுக்கொண்டேன். கொழும்பு ஜிந்துபிட்டி மாநகர சபை பொது வைத்திய வாரியத்தில், ஜூன் 21ஆம் திகதியன்று பொது மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோது, நானும் அங்கு போய், அவ்வேளையில் அங்கிருந்த சினோபோர்ம் தடுப்பூசியைத்தான் போட்டுக்கொண்டேன். இராணுவ வைத்தியசாலையில் எம்.பிக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோது அங்கு நான் போகவில்லை. அவ்வளவுதான். இதில் எந்தவித பிரச்சினையும் இல்லை.

கொரோனா அனர்த்தத்தைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள் என நாம் கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புலம்பியும், இந்த அரசு, பல கோமாளி வேலைகளை செய்து காலத்தை ஓட்டியது. கடந்த வருடம் மார்ச் மாதம் அலரி மாளிகையில் பிரதமர் நடத்திய கொரோனாத் தடுப்பு தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தையடுத்து, இந்நாடு ஒரு தீவு. இதனால், எங்களுக்கு நான்கு புறம் கடல் என்ற இயற்கை அரண் இருக்கின்றது. ஆகவேதான் நோயாளிகள் குறைவாக இருக்கிறார்கள். ஆனால், நோயாளிகளுடன் பழகிய முதற்தொற்றாளர்கள் 40 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். அவர்களை உடன் கண்காணியுங்கள் என்று நான் கூறினேன்.

அவ்வேளையில், நோயாளிகள் 40 ஆயிரம் பேர் இருக்கின்றன என நான் பொய் சொல்லி நாட்டைக் குழப்புகின்றேன் என்று சொல்லி, அரசுதரப்பு அரசியல்வாதிகளான எஸ்.பி. திஸாநாயக்க, உதய கம்மன்பில ஆகியோர் என்னைத் திட்டினார்கள். ஜிநானந்த தேரர் என்ற அரசு சார்பு பௌத்த பிக்கு என்னைக் கைது செய்யும்படி சி.ஐ.டியில் புகார் செய்தார். பொலிஸ் என்னை விசாரிக்கவோ, கைது செய்யவோ வரவில்லை. ஆனால், இன்று அந்த முட்டாள் அரசியல்வாதிகளின் ஆட்டங்கள் முடிந்துள்ளன. அந்த முட்டாள் பிக்குவையும் காணோம்.

அதன்பிறகு இன்றைய அரசு, பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகிய அமைச்சர்களைக் கொண்டு, ‘மந்திர’ சட்டியை களனி கங்கையில் போட்டு, தம்மிக்க என்பவரின் நாட்டு வைத்திய பாணியை நாடாளுமன்றம் வரை கொண்டு வந்து வயதான சபாநாயகருக்கும், வயதாகும் சுகாதார அமைச்சருக்கும் பருக்கி, ஒரு வருடத்தை வீணடித்து, மக்களின் மரணங்களுக்கும், துன்பங்களுக்கும், அழுகுரல்களுக்கும், கண்ணீருக்கும் காரணமாகி விட்டது.

இன்று, நமது நாட்டுக்கு இலவசமாக அல்லது போட்டி நிறைந்த உலக நிலைமைகளில் விலைக்காகவது, பெருந்தொகை தடுப்பூசிகளையும், அவற்றை விலைக்கு வாங்க நிதி உதவிகளையும் தந்த இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நட்பு நாடுகளுக்கும், ஐ.நா, உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய அமைப்புகளுக்கும் நன்றி.

ஆகவே, இன்று தரப்படும் தடுப்பூசிகள் இந்த அரசால் தரப்படுபவை அல்ல. மேற்கண்ட நட்பு நாடுகளும், நட்பு உலக அமைப்புகளுமே அவற்றைத் தருகின்றன. தரப்பட்ட தடுப்பூசிகளை நமது நாட்டு, சுகாதாரத்துறை மருத்துவ ஊழியர்களும், இராணுவத்தினரும் மிகச் சிறப்பாக மின்னல் வேகத்தில் மக்களுக்கு செலுத்துகின்றனர். 24 மணித்தியாலங்களில், இவர்கள் 48 மணித்தியால வேலைகளை படுவேகமாகச் செய்கிறார்கள். இவர்களுக்கு நன்றி கூற முழு நாடும் கடமைப்பட்டுள்ளது.

இந்த மந்திர பாணி, மந்திர சட்டி கோமாளி வேலைகளை கைவிட்டு, கடந்த வருடமே இன்று போல் இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொடுத்து இருந்தால், இந்நேரம் முழுநாடும் தடுப்பூசிகளைப் பெற்றிருக்கும். அவற்றை இவர்கள் சிறப்பாகச் செய்து முடித்து இருப்பார்கள். நான்கு புறமும் கடல் என்ற, இயற்கை அரண் கொண்ட ஒரு தீவான எமது நாடு, உலகில் கொரோனாவை முறியடித்த முதல் நாடாக வெற்றிக்கொடி நாட்டியிருக்கும்.

எது எப்படி இருந்தாலும், இந்த வேளையில், சுகாதாரத்துறை மருத்துவ ஊழியர்களுக்கும், இராணுவத்தினருக்கும் முழு ஒத்துழைப்பை வழங்கும் முகமாக, நாம் கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைக் கேட்டு நிற்காமல் இருப்பதை போட்டுக்கொள்ள வேண்டும். அதன்மூலம் படுவேகமாகப் பரவி வரும் டெல்டா கொரோனா கிருமிகளில் இருந்து உங்களையும், நாட்டையும் பாதுகாக்க முடியும் - என்றார்.

## தொற்றாளர் தொகை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்புலன்ஸ் வசதிகள் இல்லையாயின் பிரதேசமட்டத்தில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரண எண்ணிக்கை அதிகரிப்பதால் தொற்றாளர்கள் அனைவரும் தீவிர சிகிச்சைக் கண்காணிப்புக்குள் உட்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

## அரசின் முட்டாள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா, ரஷ்யா மற்றும் உக்ரேனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அரசு அழைத்து வந்தமையாலேயே இலங்கையில் டெல்டா பரவல் தீவிரமடையப் பிரதான காரணமாகும். எனவே தற்போது இது தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நான்காவது அலை கட்டுப்பாட்டை மீறி முழு நாடும் பாரதூரமான நிலைமையை அடைந்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஜனவரியில் கொரோனாப் பரவல் தொடர்பான தகவல்கள் வெளியாக ஆரம்பித்தபோது ராஜபக்ஷ அரசு அதனைக் கேலிக்குள்ளாக்கியது.

இதனைவிடப் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததாகக் கூறிய அரசு, நாளாந்தம் 3 ஆயிரம் பேர் உயிரிழந்த போரை நிறைவுக்குக் கொண்டு வந்த எமக்கு இது ஒரு பாரிய பிரச்சினையல்ல என்றும் தெரிவித்தது.

அரசின் இவ்வாறான அசமந்தப் போக்கே நாடு தற்போதுள்ள நிலைமைக்குக் காரணமாகும்.

அரசின் முட்டாள்தனமான முடிவுகளும், வர்த்தக நோக்கமும், அரசியல் நோக்கமும் இந்தப் பாரதூமான விளைவுகளுக்குக் காரணம் ஆகும். இதற்கு அரசே முழுப் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார்.

## கச்சான்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆலயச் சூழலில் உள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் திருவிழாவுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனை எடுக்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையிலேயே நேற்று 36 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் இருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, ஆலயத்துடன் தொடர்புடைய 75 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 25 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு போதுமானதாக இல்லை என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

## கஞ்சாவுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த சம்பவம் தொடர்பில் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 8 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து பத்தாயிரம் மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது எனக் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு இன்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூலம் இவை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

நாட்டின் அவசியம் கருதி கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரையில் ஒரு கோடியே 30 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளை சீனாவிலிருந்து தமது விமானங்கள் மூலம் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

## கீரிமலை சென்றவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக ஆலயங்களுக்கு வெளியே அதிகளவான பக்தர்கள் கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் பிதிர்க்கடன் செலுத்த அதிகளவான மக்கள் கூடியதால் இந்த அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

## வவுனியா வயல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் வவுனியா பொலிஸார் குறித்த மண்டையோட்டை மீட்ட நிலையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

## இரண்டு சுவாமிக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து அவ்வளாகம் தனிமைப்படுத்தலுக்காக மூடப்பட்டுள்ளது. ஏனைய மாணவிகளுக்கு இன்று சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வெளியிலிருந்து மிஷன் ஆச்சிரமத்துக்குச் சேவைக்காக வரும் ஒருவர் ஊடாக கொரோனாத் தொற்றியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மிஷன்வளாகம்தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் யாரும் உள்வர முடியாது. எனினும், மிஷன் அபிமானிகள் உதவி வருகின்றனர் எனவும், தனிமைப்படுத்தல் முடிவுற்றதன் பின்னர் மீண்டும் பி.சி. ஆர். பரிசோதனை செய்யப்பட்டு ஆச்சிரமம் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விதைத்ததை அறுப்பவர்கள்

எதிர்வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48 ஆவது கூட்டத் தொடரில் முன்னையதை விட பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் ஆபத்தில் இருக்கும் கொழும்பு, ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கான காரணங்களை – பொறுப்பை – சுமத்துவதற்கு புதிய தரப்பு ஒன்றைக் கண்டுபிடித்து இருக்கின்றது. தவறுக்கான பொறுப்பை அதன் தலையில் போடுவதற்கும் கொழும்பு அரசு தயாராகி விட்டது என்பது அம்பலமாகி வருகின்றது.

சர்வதேசக் களத்தில் இப்படி பல்வேறு பின்னடைவுகளை கண்டு, நெருக்கடிகளை இலங்கை எதிர் கொள்வதற்கு சர்வதேச மட்டத்தில் இவ்விடயங்களை கையாளும் தமது ராஜதந்திரிகள் சரியாகச் செயல்படவில்லை என்ற புதிய கதையை அவிழ்த்து விடத் தொடங்கியிருக்கின்றது கொழும்பு. சர்வதேசத் தரப்புகளுடனும் நாடுகளுடனும் இந்த விடயங்களை சாணக்கியத்துடன் கையாளும் தகுதி நிலையில் இலங்கையின் ராஜதந்திரிகள் இல்லை, அதனால் பின்னடைவு நிலைமை ஏற்பட்டுள்ளது, எனவே தகுதியான இராஜதந்திரிகளை அப்பதவிகளுக்குத் தனியார் துறையினர் மூலம் தெரிவு செய்து பதவிகளில் அமர்த்தத் தீர்மானித்துள்ளோம் என்று இலங்கை அரசு தரப்பில் கூறப்பட்டிருக்கின்றது.

முதற்கட்டமாக இராஜதந்திர விடயங்களைக் கையாள தகுதியுடைய 20 பேரைத் தனியார் நிறுவனங்கள் மூலம் அடையாளம் கண்டு, தெரிவு செய்து, ஆரம்பத்தில் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தூதரகங்களில் இடைநிலை இராஜதந்திர பதவிகளுக்கு அனுப்ப உள்ளோம் என்று இலங்கைத் தரப்பில் இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட ஆவணம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக கீழ்மட்டத்தில் உருவாகி, உரிய பயிற்சி, பட்டறிவு, தேர்ச்சி ஊடாக இராஜதந்திரிகளின் மேலெழுந்து உயர் பதவிக்கு வரும் முறைமைக்கு இனிமேல் ஆப்புதான்.

தனியார் துறையினரின் தெரிவுகள் மூலம் முன்மொழியப்படும் நபர்கள் இடையில் நுழைந்து, பாரம்பரிய இராஜதந்திரிகள் போல மாறும் திட்டம் நாசூக்காக முன்வைக்கப்படுகின்றது. காலங்காலமாக வெளிவிவகார அமைச்சு மூலம் இள வயதில் கீழ்மட்டத்தில் தெரிவாகி, உயர்மட்ட இராஜதந்திரிகள் ஆக உரிய பயிற்சி, வாண்மையோடு அரசு அதிகாரிகள் உயர்மட்ட ராஜதந்திரிகள் ஆக உயரும் முறைமையை சின்னாபின்னம் ஆக்கியதே அரசியல் தலைமைகளின் அளவற்ற தலையீடுதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

முன்னாள் படை அதிகாரிகள், அரச உயர் பதவிகளில் இருந்து பணியை முடிப்போர், அரசியலில் ஒய்வு பெறும் தலைவர்கள், தமக்கு வேண்டியவர்கள், நெருக்கமானவர்கள், உறவினர்கள் என்று தம் இஷ்டப்படி பலரையும் முக்கிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களாக நியமித்து, இலங்கையின் இராஜதந்திர சேவையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கியவர்களே நமது அரசியல் தலைவர்களான அரசுத் தலைவர்கள்தான்.

தூதுவர்களிலிருந்து தூதரகங்களின் கடைநிலை அதிகாரிகள் வரை அரசியல் நியமனங்களை செய்பவர்களே அரசுகளின் – அரசியல் – தலைவர்கள்தான். அது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதனால் வெளிவிவகார அமைச்சின் ஊடாகக் கீழ்நிலையில் தெரிவாகி, பயிற்சி, பரீட்சை, தேர்ச்சி, பட்டறிவு அனுபவம் என்பவற்றுடன் இராஜதந்திர சேவையில் முன்நகர்ந்த பலரின் உயர்வுகள் இடைமறிக்கப்பட்டன.

தங்களின் ஆள்களுக்கு அதிக சம்பளம், வருமானம், சொகுசு வாழ்க்கை, உயர்ந்த அந்தஸ்து போன்றவற்றை வழங்குவதற்கான ஓர் அட்சய பாத்திரமாக வெளிவிவகாரச் சேவையை நமது அரசுத் தலைவர்கள் பயன்படுத்தினர்.

அதுமாத்திரமல்ல, தகுதியான இராஜதந்திரிகள் இல்லாத நிலையில் – இத்தகைய குறுக்கு வழியில் நியமனம் பெற்றோர் தமது தகுதி, திறமை போன்றவற்றுக்கு ஏற்பவே சர்வதேச இராஜதந்திரம் மற்றும் தொடர்பாடலைக் கையாண்டனர். அதனால் கடைசியில் பாதிப்பு நாட்டுக்கும் அரசுக்கும் தான்.

அத்தோடு தமது பௌத்த, சிங்களப் பேரினவாத இனவெறிப் போக்குடன் அந்த தலைமைகள் முன்னெடுத்த அநீதிச் செயற்பாடுகளை, திறமையற்ற – பின் கதவு மூலம் நியமனம் பெற்ற – இராஜதந்திரிகளினால் சர்வதேசத்தில் நியாயப்படுத்தி சமாளிக்க முடியவில்லை. மறுபுறத்தில் கொழும்பு அரசுத் தலைமைகளுக்கு அந்தப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தம் செய்யவும் முடியவில்லை.

அதன் நேரடி விளைவுதான் சர்வதேசத்தில் கொழும்பு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைமை. தான் விதைத்த வினையை அறுக்க வேண்டிய இக்கட்டு கொழும்புக்கு.

அதற்காக – தாம் இழைத்த தவறுகளால் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு – இராஜதந்திரத் துறை மீது ஆட்சித் தலைமை குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை.

# சிவில் உடையில் பட்டப்பகலில் கடத்தல் இதற்கு எதற்கு அமைச்சர் இருக்கின்றார்

## சரத் வீரசேகரவை போட்டுத் தாக்கினார் சுமந்திரன்



நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு பதிலளிக்காத பொது பாதுகாப்பு அமைச்சரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடுமையாக சாடியிருந்தார்.

சிவில் உடையில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கடுமையான கவலைகளை எழுப்பினார்.

இது ஒரு தீவிரமான பிரச்சினை எனச் சுட்டிக் காட்டிய சுமந்திரன், இது நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமையை முழுமையாகச் சிதைப்பதை காட்டுகிறது என்றும் கூறினார்.

இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறும் போது எதற்கு அமைச்சர் என ஒருவர் இருக்கின்றார் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மூத்த விரிவுரையாளர்கள், மாணவர் ஒன்றியத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலர் பட்டப்பகலில் கடத்தப்படுகின்றமையை எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் மூலம் மீண்டும் வெள்ளை வான் கலாசாரத்தை நினைவுபடுத்துகிறீர்களா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இருப்பினும் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, சுமந்திரன் எந்த ஆதாரமும் இல்லாமல் கருத்தை வெளியிடுகிறார் எனக் கூறியமையை அடுத்து இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

# கொத்தலாவல சட்ட வரைவை நாம் எதிர்க்கப் போவதில்லை!

## பொன்சேகா திட்டவட்டம்



அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைவை எதிர்க்கப் போவதில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற குடிவரவு குடியகல்வு சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர், இருப்பினும் கல்வி பயில்வதற்கு கட்டணம் வசூலிப்பதை ஏற்றுகொள்ள முடியாது எனக் கூறினார்.

இவ்வாறு கட்டணம் வசூலிப்பது ஏழை மாணவர்கள் கல்வி பெறுவதைத் தடுக்கும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாதுகாப்புத் தரப்பினரை விமர்சிப்பதை அங்கீகரிக்கப் போவதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கூறினார்.

இதேவேளை இயற்கை உரப் பயன்பாட்டை கொண்டுவர கடுமையான முயற்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுக்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

# கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களை கண்டறிய பொலிஸார் கொழும்பில் சோதனை

கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களைக் கண்டறியும் நோக்கில் பொலிஸார் கொழும்பில் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

கொழும்பு நகரில் குறைந்தபட்சம் ஒரு மருந்தளவு தடுப்பூசியேனும் ஏற்றிக் கொள்ளாத வர்களை கண்டறியும் நோக்கில் இந்தத் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட உள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளவில்லை எனத் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களைக் கண்டுபிடித்து அவர்களை சுகததாச மைதானத்துக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதுவரையில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் எவ்வித அச்சமும் கொள்ளாது உடன் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

# கொவிட் தடுப்பூசி சான்றிதழ் பயணிகளுக்கு கட்டாயமல்ல!

## அரசாங்கம் அறிவிப்பு

பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் பயணிகள் கட்டயாம் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த நடைமுறை சாத்தியப்படலாம் ஆனால் தற்போது இந்த விடயம் சாத்தியமான விடயமல்ல என்றும் திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

பரபரப்பாக இயங்கும் குறித்த சேவையின்போது அனைவரிடமும் தடுப்பூசிக்கான சான்றிதழை பரிசோதனை செய்வது என்பது இயலாத காரியம் என்றும் அவர் தெரிவித்தார்.

# வைத்தியசாலைகளில் கொவிட்டால் நெருக்கடி

*தனியார் துறையினர் நடத்தி வரும் பல வைத்தியசாலைகளிலும் கொவிட் நோயாளிகள் நிறைந்துள்ளனர் என சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிகிச்சை அளிக்கக் கூடியவர்களின் அளவு அதிகரித்துள்ள தால் சில தனியார் வைத்தியசாலைகள் கொவிட் நோயாளிகளை அனுமதிப்பதை நிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.*



# ஆப்கானின் குண்டுஸ் தலிபான்கள் வசமானது

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரமான குண்டூஸை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நகரத்தின் விமான நிலையம் தவிர மற்ற அனைத்தும் தீவிரவாதக் கும்பலின் கட்டுப்பாட்டில் உள்ளன என உள்ளூர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குண்டூஸூல் உள்ள கட்டடங்கள் மற்றும் கடைகள் தீக்கிரையாகியுள்ள அதேவேளை நகரில் தலிபான்களின் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. தற்போது குண்டூஸ் கனகரத்துடன் சேர்த்து மூன்றாவது பிராந்திய தலைநகரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

20 ஆண்டுகால இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட கூட்டுப்படைகளின் வெளியேற்றத்தை தொடர்ந்து தலிபான்கள் அங்கு மீண்டும் தலைதூக்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக நாடுகளுக்கு 2 பில்லியன் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றுமதி செய்ய இலக்கு

## சீனா திட்டம்!

இந்த ஆண்டு இறுதிக்குள் உலக நாடுகளுக்கு 200 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச தடுப்பூசி ஒத்துழைப்பு மாநாட்டில் கருத்து தெரிவித்த சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இதனை உறுதிப்படுத்தினார்.

அத்துடன், சீனா இதுவரை 77 கோடி டோஸ்களை மற்ற நாடுகளுக்கு விநியோகித்ததனையும் அவர் உறுதிப்படுத்தினார்.



மேலும், உலக சுகாதார அமைப்பின் கொவேக்ஸ் தடுப்பூசி விநியோகத் திட்டத்திற்கு புதிய 10 கோடி அமெரிக்க டொலர்கள் உறுதிப்பாட்டையும் ஜனாதிபதி அறிவித்தார்.

சீனா இதுவரை 170 கோடி அளவுகளை 40 சதவீதத்துக்கும் மேற்பட்ட வயது வந்தோருக்கு நிர்வகித்துள்ளது. ஆண்டு இறுதிக்குள் 70 சதவீத பேருக்கு தடுப்பூசி செலுத்துவதே இலக்கு.

உலக சுகாதார அமைப்பு. சமீபத்தில் 20 கோடிக்கும் அதிகமான மக்கள் வைரஸால் உலகம் முழுவதும் இதுவரை பாதிக்கப்பட் டுள்ளனர் எனக் கூறியுள்ளது. மேலும், அதிக நாடுகளில் முதல் கொவிட் அளவுகள் கிடைக்குமுன் பணக்கார நாடுகள் தங்கள் குடிமக்களுக்கு பூஸ்டர்களை (மூன்றாவது டோஸ்) வழங்குவதை கைவிடுமாறு நிறுவனம் அழைப்பு விடுத்தது.

# உலக அளவில் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 20.29 கோடியை தாண்டியது

சீனாவின் உகான் நகரில் முதன் முதலாக வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ ஒரு ஆண்டு கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை. தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வரும் கொரோனா பல அலைகளாக



தாக்கத்தொடங்கியுள்ளது. இதனால், உலக அளவில் தொற்று பாதிப்பு தினசரி அதிகரித்து வருகிறது.

அந்த வகையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 20.29 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 18.22 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 42.98 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பரவியவர்களில் 1.63 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 98 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.



# இந்தியாவுக்கு கூடுதல் தடுப்பூசிகள் வழங்க வேண்டும்

## அமெரிக்க எம்.பி. ராஜா கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தல்

உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு அமெரிக்க அரசு சார்பில் தடுப்பூசிகள் வழங்கப்படும் என அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இதன்படி பல்வேறு ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள நாடுகளுக்கு இதுவரை அமெரிக்க அரசு சார்பில் சுமார் 8 கோடிக்கும் அதிமான தடுப்பூசி டோஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு கொரோனா பரவல் உச்சத்தில் இருந்த சமயத்தில், இந்திய அரசு சார்பில் அமெரிக்காவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டன. அதேபோல் இந்தியாவில் கொரோனா 2ஆவது அலையினால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர்கொள்ள, அமெரிக்க அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என அதிபர் ஜோ பைடன் கூறினார். அதன்படி இந்தியாவிற்கு 75 லட்சம் டோஸ் தடுப்பூசிகளை அமெரிக்க அரசு அனுப்பி வைத்தது.

இந்த நிலையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க எம்.பி. ராஜா கிருஷ்ணமூர்த்தி, இது குறித்து பேசுகையில், இந்தியாவுக்கு அமெரிக்கா 75 லட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசி மருந்துகளை வழங்கியுள்ளது. இது போதாது, கூடுதலாக வழங்க வேண்டும். அமெரிக்கா உலகளவில் தடுப்பூசி திட்டத்திற்கு உதவுவதற்கான பிரேரணைக்கு 116 எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த பிரேரணையை சட்டமாக்க வேண்டும். இதன் வாயிலாக உலக ளவில் உருவாகும் உருமாறிய புதிய கொரோனா அச்சுறுத்தலை சமாளிக்க முடியும்.

இந்த சட்டத்தின் கீழ் தடுப்பூசி தயாரிப்பை அதிகரிப்பது, விநியோகிப்பது, தொற்று நோய் பரவலை தடுப்பது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.



# பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டமைக்கு பதிலடியாக ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல்

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனியர்களுக்கும் இடையே கடந்த சில மாதங்களாக கடுமையான மோதல் நிலவி வருகிறது. இஸ்ரேலின் ஜெருசலேமில் உள்ள அல் அக்ஷா வழிபாட்டு தளத்தில் கடந்த மே மாதம் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் பலஸ்தீனியர்கள் கடுமையாக தாக்கப்பட்டனர்.

பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா முனையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இதனைத்தொடர்ந்து இஸ்ரேல் விமானப் படை காசா முனை பகுதியில் தாக்குதல் நடத்தி ஹமாஸ் அமைப்பின் முக்கிய இடங்களை தகர்த்தது.

இருதரப்புக்கும் இடையே கடந்த சில மாதங்களாக பல்வேறு கட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்று காசா பகுதியிலிருந்து பலூன்கள் மூலம் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டமைக்குப் பதிலடியாக, அந்தப் பகுதியிலுள்ள ஹமாஸ் அமைப்பின் நிலைகள் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தியது. இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் கூறுகையில், ஹமாஸ் இராணுவ வளாகம் ஒன்றிலும் அவர்களது ஏவுகணை குண்டு வீச்சு தளத்திலும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தது. எனினும், இந்தத் தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை. இதுகுறித்து ஹமாஸ் தரப்பிலிருந்தும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில்

# புதிதாக 39,070 பேருக்கு கொரோனாத் தொற்று



இந்தியாவில் கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை ஓய்ந்து வந்த நிலையில், கடந்த ஓரிரு நாள்களாக தினசரி பாதிப்பு ஏறுமுகம் கண்டு வருவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 39 ஆயிரத்து 70 பேருக்கு தொற்றுப் பாதிப்பு உறுதியாகியுள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,19,34,455 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 491 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,27,862 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 43,910 பேர் குணமடைந்து இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டனர். இதனால், குணமடைந்தவர்களின் மொத்தஎண்ணிக்கை 3,10,99,771 ஆக உயர்ந்துள்ளது. இதன்மூலம் குணமடைவோர் வீதம் 97.38 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு தற்போது 4,06,822 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தியாவில் இன்று காலைவரை செலுத்தப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 50 கோடியே 68 லட்சத்து 10 ஆயிரத்து 492 ஆக உள்ளது என்றும் இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளியே செல்வோருக்கு தடுப்பூசி கட்டாயமில்லை

## உத்தரவை மாற்றி கேரள முதல்வர் தகவல்



கேரளாவில் கடைகள், வங்கிகளுக்கு செல்வோருக்கு தடுப்பூசி கட்டாயம் என்ற உத்தரவுக்கு எதிர்ப்பு கிளம்பியமையைத் தொடர்ந்து, தடுப்பூசி கட்டாயம் இல்லை என்று அரசு அறிவித்துள்ளது.

கேரளாவில் கொரோனாப் பரவலைக் கருத்தில் கொண்டு கடைகள் மற்றும் வங்கிகளுக்கு செல்லும் பொதுமக்கள் கொரோனா தடுப்பூசி போட்டு இருக்கவேண்டும் அல்லது ஆர்.டி.பி.சி.ஆர். சோதனையில் கொரோனா இல்லை என்ற சான்று வைத்து இருக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருந்தது.

இதற்கு அங்கு கடும் எதிர்ப்பு கிளம்பியமையைத் தொடர்ந்து இந்தப் புதிய கட்டுப்பாட்டில் கேரள அரசு மாற்றங்களைச் செய்துள்ளது. இதுபற்றி கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தகவல் வழங்கும்போது, கேரளாவில் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை வாரத்தில் 6 நாள்கள் தளர்வு அறிவிக்கப்பட்ட நிலையில் கடைகள், வங்கிகள் ஆகியவற்றுக்கு செல்வோர் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும் அல்லது ஆர்.டி.பி.சி.ஆர். நெகட்டிவ் சான்றிதழ் வைத்திருக்கவேண்டும் என்ற நடைமுறை கட்டாயமாக்கப்பட்டது. தற்போது இந்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்.



# டெல்லியில் நாளை முதல் வாராந்திர சந்தைகள் திறப்பு

டெல்லியில் நாளை முதல் வாராந்திர சந்தைகள் திறக்கப்படும் என்று முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை கட்டுக்குள் வந்துள்ளது. கடந்த சில வாரங்களாக டெல்லியில் கொரோனாத் தொற்று பாதிப்பு எண்ணிக்கை இரட்டை இலக்க எண்களிலேயே பதிவாகிவருவது அங்குள்ள மக்களுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது.

தொற்றுப் பரவல் கணிசமாகக் குறைந்துள்ளதால், டெல்லியில் பெரும்பாலான தளர்வுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில், நாளை முதல் வாராந்திர சந்தைகளைத் திறக்கவும் அனுமதி அளிக்கப்படும் என்று டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பதிவில், ஏழை மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு வாராந்திர சந்தைகள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் , ஒவ்வொருவரின் ஆரோக்கியமும் முக்கியம். ஆகவே, சந்தைகள் திறந்த பிறகும் கொரோனாத் தடுப்பு விதிகளை அனைத்துத் தரப்பினரும் தவறாது பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

# கொவேக்சின், கொவிஷீல்ட் தடுப்பூசிகளைக் கலந்து போட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்குமாம்

## ஐ.சி.எம்.ஆர். ஆய்வில் தகவல்

இந்தியாவில், கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தடுப்பூசி போடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கொவிஷீல்ட், கொவேக்சின் தடுப்பூசிகள் அதிகளவில் போடப்பட்டு வருகின்றன.

கொவேக்சின் தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்துடன் இணைந்து ஹைதராபாத்தைச் சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ளது. கொரோனாவுக்கு எதிரான இதன் செயல்திறன் 81 சதவீதம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ட்ராஜெனெகா கூட்டு கண்டுபிடிப்பான கொவிஷீல்ட் தடுப்பூசியை புனேவில் உள்ள சீரம் நிறுவனம் தயாரித்து வருகிறது. இதன் கொரோனாவுக்கு எதிரான செயல்திறன் 70 சதவீதம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொவிஷீல்ட், கொவேக்சின் தடுப்பூசிகளைக் கலந்து பயன்படுத்தினால் பாதுகாப்பானது மட்டுமல்லாமல் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும் என இந்திய மருத்துவ ஆய்வுக் கழகம் (ஐ.சி.எம்.ஆர்.) தகவல் தெரிவித்துள்ளது.

இந்த இருவேறு தடுப்பூசிகளிலும் ஒவ்வொரு டோஸ்கள் செலுத்திக்கொள்வது பாதுகாப்பானது என ஆய்வில் தெரியவந்துள்ளதாக ஐ.சி.எம்.ஆர். கூறியுள்ளது. சில இடங்களில் தடுப்பூசிகளின் இரு டோஸ்களும் இவ்வாறு கலந்து போடப்பட்டதாக தகவல் வெளியான நிலையில் ஐ.சி.எம்.ஆர். இனால் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.




# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜூலை மாத உண்டியல் வருமானம் 55.5 கோடி ரூபா

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த சில மாதங்களாக பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கொரோனா பாதிப்பு குறைந்து வருவதன் காரணமாக சமீபத்தில் ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டமையையடுத்து, சாமி தரிசனத்துக்கு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஜூலை மாதம் கிடைத்த வருமானம் குறித்து திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த ஜூலை மாதம் 5 லட்சத்து 32 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். ஜூலை மாத உண்டியல் வருமானமாக மொத்தம் ரூபா.55 கோடியே 58 லட்சம் கிடைத்தது. இலத்திரனியல் இணைய வழி உண்டியல் மூலமாக ரூபா.3 கோடியே 97 லட்சம் கிடைத்தது.

35 லட்சத்து 26 ஆயிரம் லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 7 லட்சத்து 13 ஆயிரம் பக்தர்களுக்கு தறிகொண்டா வெங்கமாம்பா அன்னதானக்கூடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. 2 லட்சத்து 55 ஆயிரம் பக்தர்கள் தங்களின் தலைமுடியை காணிக்கையாக வழங்கியுள்ளனர்.

அதேபோல் திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் கடந்த ஜூலை மாதம் இலத்திரனியல் இணைய வழி உண்டியல் மூலமாக ரூபா.15 லட்சம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்ட காலங்களில் பொதுவாக திருப்பதி தேவஸ்தானத்துக்கு தினசரி வருமானம் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கின்றமை வழக்கமாகும்.



# கற்றாளை உற்பத்தியின் மூலம் தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருள்களினதும் அறிமுகநிகழ்வு




‘சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் நச்சுதன்மையற்ற நாட்டை உருவாக்குவோம்’ எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டத்தில் சேதனப்பசளையை மாத்திரம் பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்ட கற்றாளை உற்பத்தியின் மூலம் தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருள்களினது அறிமுக விழா நேற்று அக்கரைப்பற்று– அம்பாறை வீதியில் அமைந்துள்ள திட்டக்காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் கடந்த வருடம் இறக்காமத்தில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதேசசெயலகப்பிரிவின் பின்தங்கிய கிராமங்களில் வறுமைக்கோட்டில் வதியும் சமுர்த்தி பயனாளிகள் இச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஊக்குவிப்பு கடன் வழங்கப்பட்டுள்ளதோடு விவசாய திணைக்களத்தினால்அவ்வப்போது ஆலோசனைகளும் வழங்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் அறுவடை மூலமாக பெறப்பட்ட கற்றாளை மூலம் உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களின் அறிமுக விழாவில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான டபிள்யு.டீ. வீரங்க பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

முற்றும் முழுதாக சேதனப்பசளை மூலம் குறித்த கற்றாளை உற்பத்தி இடம்பெறுகிறது இதன் மூலம் உள்நாட்டு வருமானத்தை ஊக்குவிப்பதுடன் வெளிநாட்டுவருமானத்தையும் பெற முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



## ஆலயத்தில் தீமிதிப்பு வைபவம் தனிமைப்படுத்தல் விதி மீறல்

மட்டக்களப்பு செங்கலடி ஐயங்கேணி வைரவர் ஆலயத்தில் இன்றையதினம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்று திரட்டி தீ மிதிப்பு சடங்கு நடாத்திய ஆலய நிர்வாகத்திற்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இன்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய தலைவர் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளமையுடன் எதிர்வரும் புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.



## சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம்

வரலாற்றுப் புகழ்பெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோவிலின் மகோற்சவ கொடியேற்றம் நேற்று நண்பகல் மிகவும் பக்திபூர்மாக இடம்பெற்றது ஆலயத்தின் மகோற்சவ பிரதம குருக்களினால் கொடியேற்றத்திற்கான பூர்வாங்க பூசைகள் இடம்பெற்றமையுடன் உரிய நேரத்தில் மந்திரபாராயணம் ஒலிக்க கொடியேற்றம் இடம்பெற்றது.

கொடியேற்றத் திருவிழா காண வழமைக்கு மாறாக பக்தர்களின் பிரசன்னத்தை மட்டுப்படுத்தி இம்முறை ஆலயத்தின் நிருவாகம் மற்றும் உற்சவகால திருவிழாக்காரர்கள் மாத்திரம் கலந்துகொண்டிருந்தனர்.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவம் 16 நாள்கள் திருவிழா நடைபெறும். விசேட மயில்கட்டுத்திருவிழா 19ஆம், 20ஆம், 21ஆம் ஆகிய மூன்று நாள்களும் விசே டாக இடம்பெறும் அத்துடன் கொடியிறக்கம் மற்றும் தீர்த் தோற்சவம் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பெரும்தொற்றுக் காரணமாக அடியார்களை ஆலயத்திற்குள் வழிபாடுகளுக்கு அழைப்பதில்லை என்ற அறிவிப்பை அடுத்து அனைத்து அடியார்களும் வீடுகளில் இருந்து முருகப்பெருமானை வழிபாட்டுக் கொள் ளுங்கள் என ஆலயத்தின் நிருவாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆலயத்திற்குள் நாளாந்த பூசை செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற குருக்கள்மார் மற்றும் ஆலயப் பணியாளர்கள் மற்றும் நிருவாத்தினர் சுகாதார நடைமுறையைக் கடைப்பிடித்து ஆலய மகோற்சவகால செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

## குளிக்கச் சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி சாவு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாறு பாலத்திற்கு அருகில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா பைசல்நகர் தாமரைவில் பகுதியைச் சேர்ந்த மௌஜூத் பர்ஸான் 18 வயது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு இளைஞர்கள் கடல் குளிப்பதற்காக சென்றபோது அதில் ஒருவர் நீந்த முடியாத நிலையில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் அவரது சடலம் பொதுமக்கள் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் தற்போது கடற்கரையோரத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மரண விசாரணைகள் இடம்பெற்ற பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர்



# இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் இந்தியாவுக்கு 209 ஓட்டங்கள் இலக்கு



இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நொட்டிங்காமில் நடந்து வருகிறது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே இங்கிலாந்து 183 ரன்களும், இந்தியா 278 ரன்களும் எடுத்தன. 95 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 3ஆவது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 25 ரன்கள் எடுத்திருந்தது.

4 ஆவது நாள் ஆட்டம் நேற்று நடந்தது. தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 85.5 ஓவர்களில் 303ரன்கள்குவித்துஆட்டமிழந்தது. சதம் விளாசி அணியை சரிவில் இருந்து காப்பாற்றிய கப்டன் ஜோ ரூட் 109 ஓட்டங்களை எடுத்தார். அவர் அடித்த 21ஆவது சதம் இதுவாகும்.

இந்தியாவுக்கு எதிராக அவருக்கு இது 6ஆவது சதமாகும். சாம் கரன் 32 ஓட்டங்களும், பயர்ஸ்டோ 30 ஓட்டங்களும் எடுத்தனர். இந்திய அணியின் பும்ரா 5 விக்கெட்டுகளும், முகமது சிராஜ், ஷர்துல் தாகூர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் இந்திய அணிக்கு 209 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. இந்த இலக்கை நோக்கி தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்தியா, ஆட்ட நேர முடிவில் 14 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து, 52 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இன்று 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நடக்கிறது. வெற்றிக்கு மேலும் 157 ஓட்டங்கள் தேவைப்படும் நிலையில் இந்தியா இன்று தனது ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது.



# ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது பிரேஸில் கால்பந்தாட்ட அணி

டோக்கியோ ஒலிம்பிக் கால்பந்தாட்ட இறுதிப்போட்டியில் பிரேஸில் அணி, ஸ்பெயினை 2 : 1 என வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

யோகோகாமாவில் நேற்று இடம் பெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆட்டத்தின் மேலதிக நேரத்தில் ஸ்பெயின் அணியை வீழ்த்தி பிரேஸில் தங்கப் பதக்கத்தை வென்றது.

ஏற்கனவே பிரேஸில் அணி ரியோ 2016 ஒலிம்பிக் போட்டியில் பெற்றுக் கொண்ட வெற்றியை அடுத்து தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்றுள்ளது.

அதன்படி ஒலிம்பிக் ஆண்கள் கால்பந்தாட்டத்தில் தங்கப்பதக்கங்களைத் தக்கவைக்கும் ஐந்தாவது நாடாக பிரேஸில் அணி மாறியுள்ளது.

# டோக்கியோ ஒலிம்பிக் இன்றுடன் நிறைவடைகிறது



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகள் இன்று முடிவடைகின்றன.

32 ஆவது ஒலிம்பிக் திருவிழா ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த மாதம் 23 ஆம் திகதி தொடங்கியது. கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி இந்த போட்டிகள் நடந்து வருகின்றன.

205 நாடுகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டிகள் இன்றுடன் முடிவடைகின்றன. கடைசி நாளான இன்று 13 தங்கப்பதக்கத்துக்கான போட்டிகள் அரங்கேறுகின்றன.

போட்டிகள் முடிந்ததும் நிறைவு விழா நடைபெறும். அதில் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. நிறைவு விழாவில் இறுதியில் அடுத்த ஒலிம்பிக் போட்டியை 2024 ஆம் ஆண்டு நடத்தும் நாடான பிரான்ஸிடம் ஒலிம்பிக் தீபம் முறைப்படி ஒப்படைக்கப்படும்.

தற்போதைய நிலைவரப்படி பதக்கப்பட்டியலில் சீனா 38 தங்கம், 31 வெள்ளி, 18 வெண்கலம் என மொத்தம் 87 பதக்கங்களுடன் முதலிடத்தில் இருக்கிறது. அமெரிக்கா 36 தங்கம், 39 வெள்ளி, 33 வெண்கலம் என 108 பதக்கங்களுடன் 2ஆவது இடத்தில் இருக்கிறது.

## ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு தங்கம்

# ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா அசத்தல்!



நடப்பு ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு முதல் தங்கப்பதக்கத்தை ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா வென்று கொடுத்திருக்கிறார்.

ஆண்களுக்கான ஈட்டி எறிதலின் இறுதிச் சுற்று நேற்று மாலை நடைபெற்றது. மொத்தம் 12 வீரர்கள் கலந்து கொண்டனர்.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் களம் புகுந்த இந்திய வீரர் நீரஜ் சோப்ரா தனது முதல் முயற்சியிலேயே 87.03 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து தனது பதக்க வாய்ப்பை பிரகாசப்படுத்தினார். மற்ற வீரர்கள்யாரும்அவரைநெருங்கவில்லை.

தனது 2ஆவது முயற்சியில் மேலும் வேகத்தை அதிகப்படுத்திய நீரஜ் சோப்ரா 87.58 மீட்டர் தூரம் எறிந்து மேலும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார்.

செக்குடியரசின் ஜாகுப் வாட்லெஜ் ஒரு வாய்ப்பில் 86.67 மீற்றர் தூரம் வீசி கொஞ்சம் நெருக்கடி கொடுத்தார். ஆனாலும் 87 மீற்றரை தொடும் அளவுக்கு மற்றவர்களின் வேகம் அமையவில்லை.

தனிப்பட்ட சாதனையாக ஜேர்மனியின் ஜோகனஸ் வெட்டர் முன்னர் 97.76 மீட்டர் தூரம் வீசியிருந்தார். அவர்தான் ஒலிம்பிக்கில் சோப்ராவுக்கு சவாலாக இருப்பார் என்று கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜோகனஸ் வெட்டர் 82.52 மீற்றர் தூரத்துடன் 9 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

போட்டியின் முடிவில் 87 மீற்றர் தூரத்துக்கு மேலாக ஈட்டி எறிந்த இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கத்தை தனதாக்கினார். இதன் மூலம் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பதக்கத்தை வென்ற முதல் இந்தியர் என்ற புதிய சரித்திரத்தை அவர் படைத்தார்.

இந்தியா 1900ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக்கில் பங்கேற்று வருகிறது. ஆனால் தடகளத்தில் மட்டும் இந்தியாவுக்கு பதக்கம் கிடைக்காத வெற்றிடம் ஒரு நூற்றாண்டை கடந்த நிலையில், அந்த 121 ஆண்டு கால ஏக்கத்தை நீரஜ் சோப்ரா தணித்திருக்கிறார்.

1900ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் ஓட்டப்பந்தயத்தில் நார்மன் பிரிட்சார்ட் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றிருந்தாலும் அவர் ஆங்கிலோ இந்தியன் என்பதும், அதன் பிறகு அவர் நிரந்தரமாக இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியர்களைப் பொறுத்தவரை மில்கா சிங் (1960 ரோம் ஒலம்பிக்கில் 400 மீற்றர் ஓட்டம்), பி.டி.உமா (1984 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் தடை ஓட்டம்) ஆகியோர் ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் 4ஆவது இடத்தைப் பிடித்து மயிரிழை வித்தியாசத்தில் பதக்கத்தை நழுவ விட்டனர். இதுதான் ஒலிம்பிக் தடகளத்தில் இந்தியாவின் முந்தைய சிறந்த செயல்பாடாக இருந்தது.

அத்துடன் ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தங்கம் வென்ற 2ஆவது இந்தியர் என்ற சிறப்பையும் நீரஜ் சோப்ரா பெற்றார். ஏற்கனவே 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் அபினவ் பிந்த்ரா தங்கம் வென்றிருந்தார்.

ஒலிம்பிக் தடகளத்தில் இந்தியாவுக்கான புதிய அத்தியாயத்தை திறந்துள்ள 23 வயதான நீரஜ் சோப்ரா ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆசிய சம்பியன்ஷிப், கொமன்வெல்த் சம்பியன்ஷிப் மற்றும் உலக ஜுனியர் தடகளப் போட்டிகளில் தங்கம் வென்றிருந்த நீரஜ் சோப்ரா இப்போது ஒலிம்பிக்கில் உச்சத்தை எட்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

இந்த ஒலிம்பிக்கில் இந்தியா மொத்தத்தில் ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என்று மொத்தம் 7 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் 50 இடத்திற்குள் நுழைந்துள்ளது. இத்துடன் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கான போட்டிகள் நிறைவடைந்தன.

ஓர் ஒலிம்பிக்கில் இந்தியாவின் மிகச்சிறந்த செயல்பாடு இதுதான். இதற்கு முன்பு 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் 6 பதக்கம் வென்றதே (2 வெள்ளி, 4 வெண்கலம்) இந்தியாவின் சிறந்த செயல்பாடாக இருந்தது.

# கிளிநொச்சியில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகள் நிறைவு

கிளிநொச்சி- விளாவோடை வயல் பகுதியிலிருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த அகழ்வு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

குறித்த பகுதியில் 2 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியின்போது ஒரு கைக்குண்டு, தொடர்பாடல் சாதனம், இரண்டு தலைக்கவசங்கள், ரவைக் கூடுகள், உடைகள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் உணவுப் பொதிகள்உள்ளிட்டபொருள்களின் எச்சங்களுடன், மனித எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்டவைகள், 25 வருடங்கள் பழைமையானவையாக இருக்கலாம் எனவும் மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட தடய பொருள்கள் அனைத்திலும் 97 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட திகதியிடப்பட்ட பொருள்களாகவே காணப்பட்டுள்ள நிலையில் இரண்டும் ஒப்பீட்டளவில் ஒரே காலப்பகுதியைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இதன்போது மீட்கப்பட்ட கைக்குண்டு, கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்க செய்யப்படவுள்ளது எனவும் அது தற்பொழுது பாதுகாப்பாக விசேட அதிரடிப் படையினரிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டுள்ளது எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அங்கு கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருள்கள் அனைத்தும் எதிர்வரும் திங்கட்கிழமை, கிளிநொச்சி மாவட்ட நீதிவான்நீதிமன்றில்பாரப்படுத்தப்படவுள்ளன என பொலிஸார் கூறியுள்ளனர்.

# ஆசிரியர் மீது கை வைத்ததில்லை கை வைக்கப்போவதும் இல்லை!

## சரத் வீரசேகர கூறுகிறார்



ஆசிரியர்கள் மீதும் கை வைத்ததில்லை என்றும் இனிமேலும் கை வைக்கப்போவதுமில்லை என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குடிவரவு குடியகல்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 'நாட்டில் இப்போது பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். இவ்வாறான ஆர்ப்பட்டங்களால் பொலிஸ் அதிகாரியொருவர் விரல்கள் இரண்டை இழந்துள்ளார்.

ஆனால் எதிர்க்கட்சியினர் இதுவரையில் குறித்த விடயம் தொடர்பாக கண்டனத்தையோ அல்லது கவலையையோ வெளியிடவில்லை. நல்லாட்சி காலத்தில் நீர்தாரைப் பிரயோகம், கண்ணீர் புகைத்தாக்குதல், தடியடி பிரயோகம் என்பன நடத்தப்பட்டன.

ஆனால் நாங்கள் ஓர் ஆசிரியர் மீதும் கை வைத்ததில்லை, கை வைக்கப்போவதும் இல்லை. ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய எங்களை தாக்கினாலும் பொறுமையாக இருக்குமாறே பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

# வெளிநாட்டவர்களை தடுத்துவைத்த நிலையத்தில் கொடூரமான தாக்குதல்

இலங்கையில் விசா இன்றி சிக்கிய வெளிநாட்டவர்களைத் தடுத்து வைக்கும் நிலையத்தில் மோதல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மிரிஹான பிரதேசத்தில் இருக்கும் இந்த நிலையத்தில் இந்திய பெண் ஒருவரை மடகஸ்கார் நாட்டு பெண் ஒருவர் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

தாக்கப்பட்ட இந்தியப் பெண் 26 வயதுடையவர் எனவும் தாக்குதல் மேற்கொண்ட மடகஸ்கார் நாட்டு பெண் 29 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் மடகஸ்கார் நாட்டுப் பெண் கைதுசெய்யப்பட்டுபிணையில்விடுக்கப்பட்டுள்ளார். எனினும் இந்தத் தாக்குதல் மேற்கொண்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# 30 வயதுக்கு மேற்பட்ட 75 வீதத்தினருக்கு யாழில் தடுப்பூசி செலுத்தப்பட்டு விட்டது

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 2 லட்சத்து 61 ஆயிரத்து 112 பேர், கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆ.கேதீஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு லட்சம் பேருக்கு தடுப்பூசியின் முதலாவதுடோஸ்வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 50 ஆயிரம் பேர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் தற்போது 3 ஆம் கட்டமாக 2 லட்சம் பேருக்குத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்கப்பட்டு வருகிறது.

இதில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்முன்னுரிமைஅடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல மடங்கு குறைந்தது வருமான வரி வருவாய்

கடந்த 2020 ஆம் ஆண்டு முடிவு வரை தேசிய இறைவரித் திணைக்களம் பராமரித்து வரும் வரி செலுத்த வேண்டியவர்களின் வருமான வரி ஆவணங்கள் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் என்ற போதிலும் அவர்களில் 13 சதவீதத்தினரே வருமான வரியை செலுத்திவருகின்றனர் எனத்தெரியவருகிறது.

இது சாதாரணமாக 35 ஆயிரம் எனக் கூறப்படுகிறது. தற்போதைய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் வருமான வரி செலுத்த வேண்டிய குறைந்தபட்ச வருமானம் 30 லட்சம் ரூபா என அதிகரித்தால், 2021 ஆம் ஆண்டு கையாளப்பட்டு வந்த செயற்பாட்டு ரீதியான வருமான வரி செலுத்துவோரின் ஆவணங்களின் எண்ணிக்கை 16 ஆயிரமாகக் குறையலாம் எனத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2019 ஆம் ஆண்டு 1,000 கோடி ரூபாவாக இருந்த மொத்த வருமான வரி வருவாய், 600 கோடி ரூபா வரை 2021 ஆம் ஆண்டில் குறையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் மாத்திரமன்றி தேசிய இறைவரித் திணைக்களத்தைப் பராமரிக்க ஆகும் செலவை கவனத்தில் கொள்ளும்போது, ஒரு ரூபா பணத்தை சம்பாதிக்க மேலதிகமாக ஒரு ரூபா செலவாகும் எனத் திணைக்களத்தின் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வருமான வரி செலுத்தும் சுமார் ஆயிரத்து 500 நிறுவனங்கள் இருப்பதுடன் அவற்றின் மூலம் வரி வருமானமாக 4 ஆயிரம் கோடி ரூபா கிடைக்கின்றது. எனினும் உண்மையில் வருமான வரி செலுத்த வேண்டிய வர்த்தகர்களின் எண்ணிக்கை இதனை விட மூன்று மடங்காக இருக்கும் எனவும், பெரும்பாலானர்கள் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு வருமானத்தைக் குறைத்துக் காட்டி, வருமான வரியை செலுத்தாது இருந்து வருகின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் நிறுவனங்களின் வருமான ஆவணங்களை கணக்காய்வு செய்வதை தவிர்க்குமாறு அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலர் தமக்கு அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர் எனவும் தேசிய இறைவரித் திணைக்களத்தின் ஊழியர்கள் கூறியுள்ளனர்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளன

## மன்னார் வளர்பிறை பெண்கள் அமைப்பினர் சுட்டிக்காட்டு






கொவிட் தொற்று மற்றும் முடக்க நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன எனவும் மீள முடியாத கடன் சுமையில் தவிக்கின்றனர் எனவும் மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் அமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில், மாவட்ட பெண் செயற்பாட்டாளர் மேரி பிரியங்கா ஒழுங்கமைப்பில் மன்னாரில் இடம்பெற்ற கூட்டத்திலே வளர்பிறை பெண்கள் அமைப்பின் தலைவி கே.றீற்றா மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் காரணமாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மீனவ பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதேநேரம் தங்களின் சுயதொழில் உற்பத்திப் பொருள்களையோ மீன்களையோ சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அப்படியே சந்தைப்படுத்தினாலும் உரிய விலை கிடைப்பதில்லை.

இது ஒருபுறம் இருக்க, நுண் நிதி நிறுவனங்களின் கடன்களில் சிக்கியும் அவற்றைக் கட்ட முடியாத நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் செய்வதறியாத நிலையில் உள்ளன.

அதேநேரம் அரசாங்கத்தின் வீட்டுத்திட்ட நிதியும் பலவருடங்கள் கடந்தும் வழங்கப்படாமையால் அதன் காரணமாக ஏற்பட்ட கடன் சுமையையும் சமாளிக்க முடியாத நிலையில் தற்கொலை செய்ய வேண்டிய நிலையே காணப்படுவதாகவும் மன்னார்மாவட்டவளர்பிறைஅமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனவே அரசாங்கம் விரைவில் மக்களுக்கான நிவாரண உதவிகளையோ அல்லது வீட்டுத் திட்டங்களுக்கான மிகுதி பணத்தையோ அல்லது மாற்றுத்தொழில் வாய்ப்புக்களையோ ஏற்படுத்தி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2021இல் வெளியிடப்பெற்றது.